சாதாரணக் கூட்டம்.04/2021

நகரமன்றம், பேர்ணாம்பட்டு.
நாள். 30.06.2021.

அறிவிப்பு

2021-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30-ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்களின் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைப்பெறும்.

முன்னிலை: திரு.த.பாலாஜி, நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) (ம) தனிஅலுவலர்

& & & & &

பொருள் எண்.1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் பவர் பம்பு (ம) சிறுமின்விசை பம்புகளை பராமரிக்க வேண்டியும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வேண்டியும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சத்திற்கு உரிய அனுமதியும், குடிநீர் பணியின் அவசியம் கருதி இச்செலவினத்தை குடிநீர் நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ந.க.எண்.273/2021/இ1



பொருள் எண்.2

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படும் டாடா 407 மினிலாரி வண்டி எண். TN23 AU 8406 எண்ணுள்ள வாகனத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறும் வகையில் பழுது நீக்கி தயார் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/-க்கு நகர மன்ற தீர்மானம் எண்.140 நாள்.31.12.2020ல் நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் " லாவரன்ஸ் ஆட்டோ மோமடிவ் பிரைவேட் லிட்., " வேலூர் என்ற நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளியின் தொகை ரூ.1,89,604.50க்கு சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி செலவுத் தொகைக்கு மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு : பொது சுகாதாரப் பணி என்பதனால் அவசர அவசியம் கருதி பழுதுகள் நீக்கவும் செலவு தொகைக்கும் மன்றப் பார்வைக்கும்.
ந.க.எண்.265/2021/எச்1

பொருள் எண்.3

இந்நகராட்சி வார்டு எண்.01 கலைஞர் கருணாநீதி நகர் 3வது தெரு பகுதியில் சிறு பாலம் அமைக்க கோரி வந்த உங்கள் தொகுதியில் முதல்வர் மனு எண். 961480 Bridges and culverts (TN/MAWS/VEL/PORTAL/17JUN21/961480) நடவடிக்கை எடுக்க நேர் ஆய்வு செய்யப்பட்டு புதியதாக சிறு பாலம் அமைக்க ரூ.72,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு உரிய அனுமதியும், இந்நகராட்சிக்கு போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் எதிர்வரும் திட்டப் பணிக்கான ஒதுக்கீட்டில் நிதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.236/2021/இ1

பொருள் எண்.4

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு பயன்பாட்டில் உள்ள LCV வாகனங்கள் TN23 CW 5807 மற்றும் TN23 CW 5833 ஆகிய வண்டிகளுக்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் சரிசெய்து வர்ணம் பூசி 2021-2022ம் ஆண்டிற்கு தகுதிசான்று பெறும் வகையில் தயார் செய்ய வேண்டியுள்ளதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.70,000/- ஆகும் என தெரிவித்ததன் பேரில் பணிகள் மேற்கொள்ளவும் செலவினத் தொகையை நகராட்சி பொது 2021-2022ல் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.286/2021/எச்1



பொருள் எண்.5

பேர்ணாம்பட்டு நகராட்சியில் தூய்மை இந்தியா 7th SHPC திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 12 எண்ணிக்கையிலான BOV-கள் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. தற்சமயம் மூன்று நுண்ணுயிர் உர கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இந்த உரக்கிடங்கிற்கு மக்கும் குப்பைகளை மட்டும் எடுத்துச் சென்று உரமாக்கும் பணி நடைபெறுவதால் பழுதாகி உள்ள வாகனங்களை சரி செய்து கொள்ள வேண்டி ரூ.8,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தூய்மை பணியின் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதி 2021-22ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.261/2021/இ1

பொருள் எண்.6

பேர்ணாம்பட்டு நகராட்சியில் தூய்மை இந்தியா 8th SHPC திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 5 எண்ணிக்கையிலான BOV-கள் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. தற்சமயம் மூன்று நுண்ணுயிர் உர கிடங்கிற்கு மக்கும் குப்பைகளை மட்டும் எடுத்துச் சென்று உரமாக்கும் பணி நடைபெறுவதால் பழுதாகி உள்ள வாகனங்களை சரி செய்து கொள்ள வேண்டி ரூ.3,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தூய்மை பணியின் அவசர அவசியம் கருதி இம்மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதி 2021-22ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.261/2021/இ1

[illegible]

30/6/64

[illegible]

30/6/64

பொருள் எண்.7

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்ட அறை மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் அறையில் கரையான் அடித்துள்ள மரக்கதவுகளை மாற்றி புதியதாக இரும்பிலான கதவுகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.85,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்க உரிய அனுமதியும், பணியின் அவசியம் கருதி இச்செலவினத்தை பொது நிதி 2021-22ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.752/2019/இ1